(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(16).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 யூன் 09 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2023 யூன் 20, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 மார்ச் 20 ஆம் திகதிய 2324/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.06.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.04.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2023.03.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.04.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.04.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.04.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.04.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.04.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.04.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2023.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய, குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.04.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.04.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை (2019),— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, சட்டத்தின் பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.04.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை (2020),— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, சட்டத்தின் பிரிவின் கீழ் 2023.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.04.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை அரச (பொது) வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020/2021),— 1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சட்டத்தின் பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை அரச (பொது) வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் 2020/2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.04.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2023 யூன் 23, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

860/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கையில் கொவிட்-19 நோயுடன் தொடர்புடையதாக —

(i) ஆய்வுகூடத்தினால் உறுதி செய்யப்பட்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை;

(ii) உறுதி செய்யப்பட்ட மரணங்களின் மொத்த எண்ணிக்கை;

(iii) மரணித்தவர்களின் வயது, பால், வதிவிட மாகாணம் மற்றும் மாவட்டம், இனம் மற்றும் சமயம் அடிப்படையிலான மரணங்களின் எண்ணிக்கை விபரங்கள்;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு வெவ்வேறாக தெரிவிப்பாரா?

(ஆ) 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கையில் கொவிட்-19 மரணங்களுடன் தொடர்புடையதாக —

(i) சடலங்களை அகற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட முறை/முறைகள்;

(ii) தகனக்கிரியை மேற்கொள்ளப்பட்ட சடலங்களின் மொத்த எண்ணிக்கை;

(iii) அடக்கம் செய்யப்பட்ட சடலங்களின் மொத்த எண்ணிக்கை;

(iv) தகனக்கிரியை மற்றும் அடக்கம் செய்யப்பட்டவர்களின் வயது, பால், வதிவிட மாகாணம் மற்றும் மாவட்டம், இனம் மற்றும் சமயம் அடிப்படையிலான விபரங்கள்;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு வெவ்வேறாக தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2023, யூன் 23, வெள்ளிக்கிழமை)**

3332/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தங்கொட்டுவ பௌத்த நிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி பௌத்த நிலையம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், அதன் விகாராதிபதியாக இருந்தவர் யார் என்பதையும்;

(iii) மேற்குறித்த பௌத்த நிலையம் அமைக்கப்பட்டுள்ள காணியானது அதற்கென வழங்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி காணி வழங்கப்பட்டுள்ள முறையியல் யாதென்பதையும்;

(v) மேற்படி பௌத்த நிலையம் அமைக்கப்பட முன்னர் குறித்த காணியின் உரிமையாளர் யார் என்பதையும்;

(vi) மேற்படி காணியின் தற்போதைய உரிமையாளர் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 யூலை 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

869/2023

கௌரவ ரோஹண பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை அனுராதபுரம் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் பதிவாகியுள்ள சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி சிறுநீரக நோயாளிகளில் இன்றளவில் சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவைப் பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்படும் சிறுநீரக நோயாளிகளின் நலன்புரிக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1306/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கெமி செரிய" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வொவ்வொரு பேருந்தினதும் பயணப் பாதை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) பொலன்னறுவை மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1317/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வருகின்ற காதி நீதிமன்றங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) காதி நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு அமைவாக 2015ஆம் ஆண்டு முதல் இது வரை இடம்பெற்றுள்ள விவாகரத்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) காதி நீதிமன்றங்களில் கடமையாற்றும் 60 வயதைத் தாண்டிய காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) பட்டம் பெற்றுள்ள காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) காதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1323/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லக்கல புதிய நகரத்தில் புதிய பிரதேச வைத்தியசாலையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையில் பிரசவ அறை மற்றும் சிறுநீரக நோயாளர் களுக்கான குருதி சுத்திகரிப்புப் பிரிவு இல்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) வைத்தியசாலையில் தற்போது காணப்படுகின்ற குறைபாடுகளைப் பூர்த்தி செய்து, அதனை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1325/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் இன்றளவில் வலுவூட்டப்பட்டுள்ள சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) சமுர்த்தி நிவாரணத்தைப் பெறும் நோக்கத்துடன் விண்ணப்பித்துள்ள பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் அநுராதபுர மாவட்டத்தில் உள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1461/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் கரையோர வலயங்களின் நில அளவைப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளின் அளவு எத்தனை ஹெக்டேயர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கரையோரப் பாதுகாப்பு கருத்திட்டங்கள் தனியார் துறையினருக்கு அளிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களை தனியார் துறையினருக்கு அளிக்கும் போது பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1506/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்தினால் வழங்கப்படும் சேவைகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அச்சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலகுவான வழிமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது விபத்துகளுக்கு முகங்கொடுக்கும் பணியாளர்களுக்கு இரண்டு மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இன்றளவில் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1543/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சொந்தமான காடுகளின் பரப்பளவு எத்தனை ஹெக்டேயர்கள் என்பதையும்;

(ii) மேற்படி காடுகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) அக் காடுகளிலுள்ள தாவரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி காடுகளிலுள்ள இலங்கைக்கு மாத்திரம் தனித்துவமான தாவர வகைகள் யாவை என்பதையும்;

(v) அவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1714/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கான சோளத்தின் தேவை மற்றும் உற்பத்தியின் அளவு ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் சோளம் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், இறக்குமதி செய்யப்பட்ட சோளத்தின் அளவு மற்றும் அதற்காக செலவு செய்யப்பட்ட தொகை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கையை சோள உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2879/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபம்/ நட்டம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2023 ஆம் ஆண்டுக்காக மேற்படி கூட்டுத்தாபனம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தியுள்ளது என்பதனை அறிவாரா என்பதையும்;

(iii) அதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு சேவைத் தொகுதியின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) பொதுத் திறைசேரியின் ஆலோசனைகளை கருத்திற்கொள்ளாது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிருவாகத்தினரால் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 யூலை 05, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1579/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் அனுமதிப்பத்திரங்களைக் கொண்டுள்ள சட்டரீதியான மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப தனித்தனியாக யாது;

(ii) மதுபான அனுமதிப்பத்திரங்களைக் கொண்டுள்ள சட்டரீதியான உணவகங்களின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது விநியோகிக்கப்பட்டுள்ள மதுபான அனுமதிப்பத்திரங்களிலிருந்து வருடாந்தம் ஈட்டப்படும் வருமானம் யாது;

(iv) எதிர்காலத்தில் விநியோகிக்கப்படவுள்ள புதிய மதுபான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1618/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு சுற்றாடல் அமைச்சினால் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டு அதன் கீழ் பொறுப்புகள் கையளிக்கப்படும் நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) ஆயினும், 2022 ஆம் ஆண்டு வரை அது தொடர்பான செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி கொள்கையை அமுல்படுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டமொன்று இன்றளவில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி செயற்பாட்டுத் திட்டம் யாதென்பதையும்;

(iii) இன்றேல், அது தயாரிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி கொள்கையை அமுல்படுத்தும்போது நடைமுறை ரீதியில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி சிக்கல்களைத் தீர்ப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1636/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையிலிருந்து வருடாந்தம் அனுகூலங் களைப் பெற்றுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தினால் அனுகூலங்கள் வழங்கப்படும் விபத்துகள் தொடர்பில் மக்கள் விழிப்பூட்டப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்படும் அனுகூலங்களை மேலும் அதிகரிப்பதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனம் தொடர்பில் மக்களை விழிப்பூட்டுவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தை மேலும் மக்கள் நேயமிக்க நிறுவனமாக பேணிச் செல்வதற்கு யாதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1678/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதன் பொருட்டு நெல், சோளம், மிளகாய், பெரிய வெங்காயம், சோயா மற்றும் உருழைக்கிழங்கு ஆகிய பயிர்களுக்கென இலவச காப்புறுதிக் காப்பீடு வழங்கப்படுவதுடன், அனர்த்தங்கள் காரணமாக மேற்குறிப்பிட்ட பயிர்கள் அழிவடைகையில் கமத்தொழில் அமைச்சு காப்புறுதி இழப்பீடுகளை வழங்குகின்றது என்பதையும்;

(ii) ஆயினும், உழுந்து மற்றும் நிலக்கடலை போன்ற பயிர்களுக்கென இத்தகைய காப்புறுதி காப்பீடு வழங்கப்படாமையினால், இப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அனர்த்தங்களின்போது பாரிய சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், உழுந்து மற்றும் நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கென இலவச காப்புறுதி காப்பீட்டை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1759/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விலங்குப் பண்ணைகளை விரிவாக்கும் கருத்திட்டம் தற்போது அமுலில் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்தின் கீழ் இன்றளவில் விரிவாக்கப்பட்டுள்ள பண்ணைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி பண்ணைகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் சதவீதமாக யாது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் நிறைவு செய்யப்படவுள்ள திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1802/2023

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திலுள்ள குளங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு குளத்தின் பெயர் மற்றும் நீர்க் கொள்ளளவு தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள குளங்களில் 2023 ஆம் ஆண்டில் புனரமைப்புச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள குளங்கள் யாவை என்பதையும்;

(iv) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1813/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையிலுள்ள கருங்கல் உடைத்தல் வேலைத்தளங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி வேலைத்தளங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெடிபொருட்களின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி வெடிபொருட்கள் காணாமல் போயுள்ளதாக கணக்காய்வு அறிக்கைகளினூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி நிலைமையானது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையுக்கூடும் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) கருங்கல் உடைத்தல் வேலைத்தளங்களுக்கு வழங்கப்படும் வெடிபொருட்களை ஒழுங்குபடுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2531/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் யானை - மனித மோதல் நிலவுகின்ற பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில் யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அமைக்கப்பட்ட யானை வேலிகளின் மொத்த நீளம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் யானை வேலிகள் அமைக்கப்படாதுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) அப்பிரதேசங்களில் யானை வேலிகளை அமைப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் அமைக்கப்பட்டுள்ள யானை வேலிகளை மேலும் நீடிப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 யூலை 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2574/2023

கௌரவ டீ. வீரசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையிலுள்ள கறவைப் பசுக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கையின் வருடாந்த திரவப்பால் தேவை எவ்வளவென்பதையும்;

(iii) கறவைப் பசுக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மேய்ச்சல் தரைகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மேய்ச்சல் தரைகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(v) இலங்கையின் திரவப்பால் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக கறவைப் பசுக்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2622/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2690/2023

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தரத்தில் உயர்ந்த விதைகளைப் பெற்றுக்கொள்வதானது விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாகும் என்பதையும்;

(ii) சந்தையில் அதிக விலைக்கு விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி விதைகள் தரமற்றவை என்பதையும்;

(iv) அதன் காரணமாக விவசாயிகள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) விவசாயிகளுக்கு தரத்தில் உயர்ந்த விதைகளை வழங்குவதற்காக இன்றளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(ii) விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iii) விதைகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) இலங்கைக்குத் தேவையான விதைகளை நாட்டுக்குள்ளேயே உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(v) கமநல சேவை நிலையங்களை, பிரதேச விதைக் களஞ்சியசாலைகளாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2842/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கொல்லர் பட்டறை கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இவர்கள் பாரிய சிரமங்களுக்கு மத்தியில் கைத்தொழிலை நடத்திவருவதுடன் பல்வகையான உற்பத்திகளையும் மேற்கொண்டு வருகின்றனர் என்பதையும்;

(iii) கொல்லர் பட்டறைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை உள்நாட்டு சந்தையில் ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்படும் விவசாய உபகரணங்களை அதைரியப்படுத்துவதன் ஊடாக கொல்லர் பட்டறை கைத்தொழிலை பாதுகாக்க முடியுமென்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனின், இதற்கென மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2932/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொலிஸ் அலகு தாபிக்கப்பட்ட திகதி மற்றும் அகற்றப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி அலகு அகற்றப்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறையில் இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகள் அதிகரித்துள்ள பின்னணியில் மேற்குறிப்பிட்ட பொலிஸ் அலகு அகற்றப்பட்டமையானது சட்டரீதியான மற்றும் தர்க்க ரீதியான அடிப்படையின்றி மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானம் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்பொலிஸ் அலகினை மீண்டும் தாபிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2969/2023

கௌரவ ஹேஷா விதானகே,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்ரிக்கின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கைக்கு பிளாஸ்ரிக் இறக்குமதி செய்யப்படுவதை மட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3074/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் —

(i) பணியாற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) நிரந்தர மற்றும் ஒப்பந்த/அமய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் ஒப்பந்த /அமய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3093/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஜா - எல பிரதேச செயலகப் பிரிவில் "பேரலந்த" எனும் பெயரில் குளமொன்று உள்ளது என்பதையும்;

(ii) மேற்படி குளத்தினை அபிவிருத்தி செய்வதற்காக கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கருத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதனை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்தினை மீள ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3106/2023

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவில் அமைந்துள்ள வாவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் பாசன நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற மற்றும் பயன்படுத்தப்படாத வாவிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி வாவிகளின் நீர்க் கொள்ளளவு தனித்தனியே யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நெடுந்தீவில் அமைந்துள்ள வாவிகளில் இன்றளவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள வாவிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வாவிகளை புனரமைப்புச் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றளவில் புனரமைப்புச் செய்யப்படாதுள்ள வாவிகளை புனரமைப்புச் செய்வதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இத்தீவில் காணப்படுகின்ற குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக தீவில் அமைந்துள்ள வாவிகளின் மூலம் குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கான ஏதேனும் முறையியல் உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3171/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அச்சிடல் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் கடதாசி உள்ளிட்ட உபகரணங்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு அச்சுத் துறை சார்ந்த வணிகங்களின் செயற்பாடுகள் நலிவடைவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது என்பதையும்;

(ii) இதன் விளைவாக பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் அரச மற்றும் தனியார் துறையால் மாதாந்தம் உற்பத்தி செய்யப்படும் கடதாசியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) கடதாசி இறக்குமதியைக் குறைத்து, இந்நாட்டில் கடதாசியை உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பான தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2023 யூலை 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக தரவரிசைப்படுத்தப்படும் போது கருத்திற்கொள்ளப்படும் காரணிகள் யாவையென்பதையும்;

(ii) கடந்த "நல்லாட்சி அரசாங்கம்" ஆட்சியிலிருந்தபோது மத்தள சர்வதேச விமான நிலையம் நெல் களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி நெல் களஞ்சியப்படுத்துவதற்கான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு காரணமாகவிருந்த அரசியல்வாதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அத் தீர்மானத்தின் விளைவாக மேற்படி விமான நிலையத்தின் வளாகத்திற்கும் அவ் விமான நிலையத்தின் நற்பெயருக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

384/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விக்டோரியா நீர்த்தேக்கத்தின் ஆகக் கூடிய நீர்க் கொள்ளளவு 2021 ஆம் ஆண்டளவில் 723 மில்லியன் கன மீற்றர் ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு சனவரி மாத இறுதியில் அது 428 மில்லியன் கன மீற்றர் வரை குறைவடைந்தது என்பதையும்;

(ii) அந்த நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் சடுதியாக குறைவடைவதற்கு மகாவலி கங்கையின் மத்தியில் ஏற்பட்டுள்ள வெடிப்பொன்றே காரணமாக அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மகாவலி கங்கையின் நீர்க் கொள்ளளவு சடுதியாக குறைவடைகின்றமை தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) நீர்த்தேக்க மட்டத்தில் வருடாந்த நீர்க் கொள்ளளவு பற்றிய கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மின்சார உற்பத்திக்காக அதிகளவில் நீரைப் பயன்படுத்துவதனால் கங்கைகளில் நீர் வற்றிப் போதல் / ஆவியாதல் காரணமாக எதிர்காலத்தில் விவசாயத்திற்குத் தேவையான நீரை உரிய காலத்தில் பெற்றுக்கொள்வது சிக்கலாக அமையலாம் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

421/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை ஊழியர்கள் 2018 மற்றும் 2021 ஆகிய ஒவ்வொரு ஆண்டிலும் இலங்கைக்கு அனுப்பியுள்ள அந்நியச் செலாவணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை ஊழியர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணியின் அளவு மற்றைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டு குறைவடைந்ததற்கு, திறந்த சந்தையில் அமெரிக்க டொலருக்கு கிடைத்த நாணய மாற்று விகிதத்தை விட குறைவானதொரு நாணய மாற்று விகிதம் வர்த்தக வங்கிகளிலிருந்து வழங்கப்பட்டமை காரணமாக அமைந்ததென அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

433/2023

கௌரவ புத்திக பத்திரண,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருமதி பிரேமா தாபரே எழுதி, திரு.வீரசேன குணதிலக்க பாடிய "*கொபெய்யனே வரெல்லா*" எனும் பாடல் இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்திற்கான வானொலி அலைவரிசைகளில் ஒலிபரப்பப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(iii) மேற்படி தடையினை விதிப்பதற்கு முன்னர் அது தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அவ் விசாரணை யாரால் மேற்கொள்ளப்பட்டது;

(v) மேற்குறிப்பிட்ட பாடல், இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்திற்கான அலைவரிசையொன்றில் இறுதியாக ஒலிபரப்பப்பட்ட திகதி மற்றும் நேரம் யாது;

(vi) எதிர்காலத்தில் குறிப்பிட்ட தடையினை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

691/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,- பிரதம அமைச்சரும், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட களுதாவளை பிரதேசத்தில் கடந்த “நல்லாட்சி” அரசாங்கக் காலத்தில் வர்த்தக மையமொன்று நிர்மாணிக்கப்பட்டது என்பதையும்;

(ii) இதுவரை அந்த வர்த்தக மையம் திறந்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தக மையத்தை இதுவரை திறந்துவைக்காததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அந்த வர்த்தக மையத்தை திறந்துவைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்த வர்த்தக மையம் திறந்துவைக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iv) மேற்படி வர்த்தக மையத்தை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அந்த நிகழ்ச்சித்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

817/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களின் எண்ணிக்கை வெவ்வேறாகவும்;

(ii) இலங்கைப் பொலிஸ் துறையில் பணியாற்றும் பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கையும்;

(iii) அந்த எண்ணிக்கை, பொலிஸ் மா அதிபர் தொடக்கம் பொலிஸ் கான்ஸ்டபில் சாரதி வரை ஒவ்வொரு பதவி வாரியாக வெவ்வெறாகவும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பதவியையும் வகிக்கின்ற பெண் பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை வெவ்வேறாகவும்;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முக்கிய பிரமுகர் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மொத்த பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களில், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத பிரமுகர்களின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஏனைய பிரமுகர் தொகுதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3229/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின், வெள்ளமண்கரை மீன்பிடித் துறைமுகத்தை அமைப்பதற்காக செலவிடப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அத்துறைமுகத்தின் தொழிற்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அத்திகதியிலிருந்து இதுவரை ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெள்ளமண்கரை மீன்பிடித் துறைமுகம் தொடர்பில் சுற்றாடல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அச்சுற்றாடல் அறிக்கையைத் தயாரித்த உத்தியோகத்தர்கள் மற்றும் அதற்கு அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் என்பன தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) அச்சுற்றாடல் அறிக்கை சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3320/2023

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு, — (1)

(அ) (i) 2020 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின்போது தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை வெவ்வேறாகவும்;

(ii) மேற்படி நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவகங்கள் ஒவ்வொன்றுக்கும் விடுவிக்கப்பட்டுள்ள நிதிகளை வெவ்வேறாகவும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு நிறுவகத்தினதும் மூலதனச் செலவிற்காகவும் மீண்டெழும் செலவிற்காகவும் ஒதுக்கப்பட்ட நிதியினதும் விடுவிக்கப்பட்ட நிதியினதும் சதவீதங்களை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3333/2023

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டிற்கும் 2013 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கை வங்கியின் அப்போதைய தலைவராக இருந்த திரு. காமினி விக்கிரமசிங்க தொடர்புபட்டிருந்த ஊழல் நடவடிக்கைகள் பற்றி அவர் அறிவாரா என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை வங்கி கடன் வட்டியினைத் தள்ளுபடி செய்திருந்தது என்பது மிஹின் லங்கா மற்றும் சிறிலங்கன் விமானசேவைகள் பற்றி விசாரித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் வெளிக்கூறப்பட்டதா என்பதையும்;

(iii) திரு. விக்கிரமசிங்க தலைவராக இருந்த மேற்குறிப்பிட்ட வங்கி, தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரத்தினைப் பொருத்துவதற்கும் தகவல் தொழினுட்பம் தொடர்பான சேவைகளை வழங்குவதற்கும் இன்போமெடிக்ஸ் குழுமத்திற்கு ஒப்பந்தங்களை வழங்கியதா என்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்தங்களை வழங்கிய வேளையில் மேற்குறிப்பிட்ட நபர் இன்போமெடிக்ஸ் குழுமத்தில் பகுதி உரித்தாண்மையினைக் கொண்டிருந்தாரா என்பதையும்;

(v) இன்போமெடிக்ஸ் குழுமத்தின் உரிமையாளராக இருக்கையில் இலங்கை வங்கியின் தலைவர் என்ற ரீதியில் கடமைகளை நிறைவேற்றுகையில் நலன் முரண்பாடு காணப்பட்டதா என்பதையும்;

(vi) திரு. விக்கிரமசிங்கவின் மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களும் ஏனைய ஊழல்களும் விசாரிக்கப்படுகின்றனவா என்பதையும்;

(vii) விசாரணையில் இருந்து கண்டறியப்பட்டவற்றினையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3334/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அரசாங்க பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை, அவற்றின் பெயர்கள் மற்றும் அப் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள பீடங்களின் பெயர்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகங்களில் நிலவும் விரிவுரையாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், எதிர்காலத்தில் அவ்வாறான இடம்பெயர்வுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 3/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 5/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 8/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2023

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/2023

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/2023

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/2023

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/2023

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/2023

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2023

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/2023

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2023

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/2023

கௌரவ புத்திக பத்திறண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.22/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் வழங்கும் நிறுவனங்களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துதல்,— நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் காரணமாக நகர்ப்புற மற்றும் கிராமிய சமூகம் பெரும் நிலைகுலைவுக்கு உட்பட்டுள்ளமையினாலும், நுண்நிதி மற்றும் குத்தகை கடன் தொடர்பில் குறிப்பிட்ட நிறுவனங்களின் தூண்டுதல் காரணமாக கடன் பெற்றுக்கொண்டுள்ள ஏராளமான குடும்பங்கள் தற்போது கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளமையினாலும், அந்த நிறுவனங்களின் வட்டி வீதங்கள் பல்வேறு அளவுகளில் காணப்படுவதனாலும், குத்தகை கடன் தவணைகளைச் செலுத்தத் தவறும் நபர்கள் குறிப்பிட்ட நிறுவனங்களின் பல்வேறுபட்ட அழுத்தங்கள் மற்றும் வன்முறைகளுக்கு ஆளாவதனாலும், நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் நிறுவனங்களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரரிக்கின்றது.

பா. 23/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடல்,— பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி வருடாந்தம் பெற்றோர்களிடமிருந்து தொடர்ச்சியாக அறவிடப்படுவதாலும், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக சில பெற்றோர்களுக்கு மேற்படி நிதியினை வழங்குவதில் சிரமங்கள் காணப்படுவதால் அப் பெற்றோர்களின் பிள்ளைகள் வகுப்பறையில் அசௌகரியங்களுக்கு உள்ளாவதற்கு வாய்ப்புள்ளதாலும், பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியினை எவ்வாறு திரட்ட வேண்டும் என்பது தொடர்பாகவும், மேற்படி நிதி தொடர்பான வரவு செலவு அறிக்கைகளை காட்சிப்படுத்த வேண்டிய விதம் தொடர்பாகவும், மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய விதம் தொடர்பாகவும் பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரரிக்கின்றது.

பா.24/2023

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார,— இலங்கையில் ஆசிரியர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்கப்படுதல்,— ஒரே பாடசாலையில் பல ஆண்டுகளாக பணியாற்றுவதன் மூலம் உருவாகும் தனிப்பட்ட தொடர்புகளால் சில பிள்ளைகளுக்கு சிற்சில சந்தர்ப்பங்களில் அநீதிகள் ஏற்படலாமென்பதாலும், சமூகத்தின் பல்வேறு படிநிலைகளைச் சேர்ந்த பிள்ளைகளுடன் பணியாற்றுவதன் மூலம் அவர்களின் மனநிலையை புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இழக்கப்படுவதாலும், அரசியல் மற்றும் சமூக தொடர்புகள் காரணமாக சுயாதீன கல்வி முறையொன்றைப் பேணிச் செல்வதில் இடையூறுகள் ஏற்படலாமென்பதாலும், சமூகத்திலுள்ள உப கலாசாரங்களை புரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் நழுவிச் செல்வதாலும், பல்வேறான பிரதேச மொழிகள் மற்றும் கலாசாரங் களிலிருந்து அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ளதாலும், கல்வியை வழங்குதல் மற்றும் நற் சமூக பிரஜைகளை உருவாக்குதல் எனும் ஒரே நோக்கம் நிறைவேறும் கல்வி முறையொன்றை உருவாக்குவதற்காக அனைத்து ஆசிரியர்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்குவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.25/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுப்பு வாய்ந்த பிற நிறுவனங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்காக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளுதல்,— கடந்த காலத்தில் இலங்கையின் அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களால் அலுவலக உபகரணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மர தளபாடங்கள் மிக நீண்டகாலம் உபயோகப்படுத்தப்பட்ட போதிலும், தற்போது அந்த நிறுவனங்கள் பயன்படுத்தும் அலுவலக உபகரணங்கள் ஒட்டுப்பலகை மற்றும் ஏனைய செயற்கை தகடு வகைகள்கொண்டு தயாரிக்கப்படுவதால் அவை மிகக் குறுகிய காலத்தில் அழிவடைவதாலும், தற்போதைய இந்த அலுவலக உபகரணங்களைத் தயாரிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் வெளிநாடுகளுக்கு அதிகளவில் பணம் சென்றடைவதாலும், இத்தகைய பொருட்கள் எமது சூழல் தொகுதிக்கு வெளியிடப்படுவதால் பாரிய தாக்கம் ஏற்படுவதாலும், அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுப்பு வாய்ந்த பிற நிறுவனங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்காக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.